1968 ஆகஸ்ட் 19]

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, there was a fire accident (Acidental one) in Periyar Nagar, Varaganeri village of Tiruchirappalli taluk, at 2 p.m. on 14th July 1968 in which about 347 houses were gutted, 4 women and 3 children lost their lives and about 7 herds of cattle perished. The loss was estimated at Rs. 2 lakhs.

The Collector who inspected the scene of accident on that day immediately arranged for feeding and other relief measures such as disbursement of cash grants to eligible victims. 128 families which were affected by fire were paid Rs. 80 each by the Collector towards housing and clothing grant and 110 families were paid Rs. 20 each towards clothing grant only. The remaining 109 families were not eligible for any of the grants.

5. அறிவிப்புகள்

(i) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, இனம்கள் (தீர்வை விதித்தல்) (திருத்த) மசோதா

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனம்கள் (தீர்வை விதித்தல்) (திருத்த) மசோதாவை இப் பேரவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் ஒரு மணி நேர விவாதத்திற்கு 57-வது விதியின்படி ஒரு அறிவிக்கை கொடுத்திருக்கிறேன். அது மிகவும் அத்தியாவசியமானது, முக்கியமானது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் மழை இல்லாத காரணத்தினால், குடியாத்தம், வேலூர், திருப்பத்தூர், செய்யாறு போன்ற சில பகுதிகள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் 57-வது விதியின்படி ஒரு மணி நேர விவாதத்திற்குக் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றிய முடிவை என்னுடைய அறையிலே வந்து கேட்டுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

6. அரசினர் மசோதாக்கள்

(i) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, இனம்கள் (தீர்வை விதித்தல்) (திருத்த) மசோதா

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1963-ம் ஆண்டு இனம்கள் (தீர்வை விதித்தல்) (திருத்த) மசோதாவை இந்த மாமன்றத்தின் திருமுன் அறிமுகம் செய்ய அனுமதிக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.